NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2020

# TAMIL SECOND ADDITIONAL LANGUAGE: PAPER II

Time: 2 hours | 100 marks

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 6 pages. Please check that your question paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. All answers must be in TAMIL.
5. It is in your own interest to write legibly and to present your work neatly.

IEB Copyright © 2020

## SECTION A

**QUESTION 1** பகுதி ஒன்று

ஐந்து தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஏதேனும் ஒன்றைப் பற்றி ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

1.1 நமது தாய் மொழி தமிழ்

1.2 என் செல்லப் பிராணி

1.3 பூக்கள்

1.4 நான் படித்த ஒரு நல்ல கதை

1.5 நமது பதிய அடுத்த வீட்டுக்கார்

**30 marks**

IEB Copyright © 2020

**SECTION B**

**QUESTION 2** பகுதி இரண்டு

ஏதேனும் மூன்றைப் பற்றி எழுதுக

(Choose any 3 from the 4 questions given.)

2.1 உன் தம்பியின் பிறந்த நாள் விழாவைப் பற்றி உன் தோழனுக்கு/ தோழிக்கு கடிதம் எழுதுக. (10)

2.2 SMS: வரிசையாக எழுதுக:

எங்களை வந்து பார்க்க வேண்டும்

அம்மாவுக்கு புற்று நோய் இருக்கிறது

வணக்கம். நலமா ?

எங்களுக்கு ஆறுதல் தேவை

நன்றி, வணக்கம்

ஒரு கெட்ட செய்தி சொல்ல வேண்டும். (10)

2.3 நீ வேலைச் செய்யும் பூக்கடையில் பூக்கள் குறைந்த விலைக்கு விற்கப் போகிறாய். ஐந்து பூக்களின் பெயர்களை குறித்து ஒரு விளம்பரம் தயாரிக்கவும். (10)

2.4 சுருக்கி எழுதுக: (சுமார் 12 - 15 சொற்கள்)

பிள்ளைகளின் ஆற்றலுக்கும் திறமைக்கும் ஏற்ற கல்வி தர வேண்டும். ஏட்டுப் படிப்பு மட்டும் படிப்பாகாது. தொழிற் படிப்பும் படிப்பாகும். ஏட்டுப் படிப்புக்கு எவ்வளவு அறிவு வேண்டுமோ, அவ்வளவு அறிவு தொழிற் படிப்புக்கும் வேண்டும். அந்த அறிவையும் திறனையும் ஐம்பதில் பெறமுடியாது. இளமையிலேதான் பெறமுடியும். ஐந்திலேயே குழந்தைகள் அறிவுக்கும், ஊக்கத்திற்கும் ஆர்வத்திற்கும் ஏற்ற கல்வியைக் கற்க வேண்டும். இங்கே "உழுகிற காலத்திலே ஊர் சுற்றிவிட்டு, அறுவடைக் காலத்தில் அரிவாள் கொண்டு வந்தால் என்ன கிடைக்கும்?" என்ற பெரியவர்கள் பழமொழியை எண்ணிப்பார்த்தால், 'பருவத்தே பயிர் செய்யும்' பண்பு ஏற்பட்டு விடும். எதிர்காலத்தில் நல்ல செல்வம் உடையதாக இந்திய நாட்டை அமைக்க ஏட்டுப் படிப்பும் வேண்டும்; தொழிற்படிப்பும் வேண்டும். இவற்றைத்தான் பாரதியார் பலகல்வி என்று பாடுகிறார். (10)

**30 marks**

IEB Copyright © 2020 

## SECTION C

## QUESTION 3 பகுதி மூன்று

3.1 கீழ்வரும் பகுதியைப் படித்து, பின்வரும் கேள்விகளுக்கு விடை தருக:

பெண்மைக்குச் சிறப்பளித்துச் செல்வத்திற்கும் கலைகளுக்கும் உரிமையுடைய *தலைமக்களாகவும் தெய்வங்களாகவும்* வைத்துப் போற்றியுள்ளனர். கங்கை, காவிரி, யமுனை எனப் பெண்களின் பெயர்களை நதிகளுக்குச் சூட்டித் தாய்மையின் பெருமையைப் போற்றியுள்ளனர். நாட்டைத் 'தாய் நாடு' எனக் குறிப்பிட்டுள்ளனர். பெண்மைக்குத் தாய்மைச் சிறப்பு அனைத்துத் துறைகளிலும் ஒரு காலத்தில் அளிக்கப் பெற்றது. அன்புக்கு அடங்கித் துன்பங்களை *எல்லாம்* ஏற்று வாழ்வதில் இன்பம் கண்டவர்கள் பெண்கள். அப்பெண்கள் பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படும்நிலை நடைமுறையில் காணப்படுகிறது. அதனால் பொங்கி எழுந்த பெண்மையின் இயல்பு இதில் விளக்கப்பட்டுள்ளது.

3.1.1 தமிழில் வல்லின மெய்கள் யாவை? (1)

3.1.2 பெயர்ச்சொல் என்றால் என்ன? (1)

3.1.3 மேற்காணும் பகுதியிலிருந்து நான்கு (4) பெயர்ச்சொற்கள் எழுதுக. (4)

3.1.4 வினைச்சொல் என்றால் என்ன? (1)

3.1.5 மேற்காணும் பகுதியிலிருந்து இரண்டு (2) வினைச்சொற்கள் தருக. (2)

3.2 ஒருமைக்கு பன்மை எழுதுக:

உம்: சேடி - சேடிகள்

3.2.1 மேசை (1)

3.2.2 ஞாபகம் (1)

3.2.3 பூ (1)

3.2.4 விழா (1)

IEB Copyright © 2020

3.3 எதிர்ச்சொற்கள் தருக:

உம : பெரிய - சிறிய

3.3.1 புதிய (1)

3.3.2 இரவு (1)

3.3.3 காலை (1)

3.3.4 மேல் (1)

3.4 ஆண்பாலுக்கு பெண்பால் தருக:

உம்: சிறுவன் - சிறுமி

3.4.1 பாட்டன் (1)

3.4.2 இளவரசன் (1)

3.4.3 செல்வன் (1)

3.4.4 சிற்றப்பன் (1)

3.5 வேற்றுமை சரியாக எழுதுக

3.5.1 நான் <u>வீடு</u> போனேன். (1)

3.5.2 கந்தன் <u>கடை</u> சென்றான். (1)

3.5.3 பூனை <u>எலி</u> பிடித்த்து (1)

3.5.4 கமலா <u>நூல்</u> வாங்கினாள் (1)

3.6 சேர்த்து எழுதுக

3.6.1 பலா + பழம் (1)

3.6.2 பச்சை + கிளி (1)

3.6.3 பெரிய + பள்ளி (1)

3.6.4 ஆடு + குட்டி (1)

3.7 பிரித்து எழுதுக:

3.7.1 அதைச்செய்தான் (1)

3.7.2 நண்டைப்பிடித்தான் (1)

3.7.3 இரண்டாயிரம் (1)

3.8 விலங்குகளின் ஒலிகள்

உம்: நாய் குரைக்கும்

3.8.1 கழுதை (1)

3.8.2 சிங்கம் (1)

3.8.3 பன்றி (1)

3.9 எண்கள்: சரியான விடை எழுதுக:

உம்: இரண்டு + மூன்று = ஐந்து

3.9.1 ஒன்று + மூன்று = (1)

3.9.2 ஐந்து + ஐந்து = (1)

3.9.3 100 = (1)

3.10 இறந்த (Past tense) காலத்தில் எழுதுக

உம்: அவன் படிக்கிறான்

அவன் படித்தான்

3.10.1 குமாரன் அடிக்கிறான் (1)

3.10.2 செல்வி நடிக்கிறாள் (1)

**40 marks**

**Total: 100 marks**

IEB Copyright © 2020